ஆலையடிவேம்பு பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலையடிவேம்பு பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் பொருட் கணக்கெடுப்பு சபையின் அறிக்கையின் பிரகாரம், ரூபா 15,150 க்கு ஏல விற்பனை செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் கிரயப் பெறுமதி மற்றும் பதிவழிப்புச் செய்யப்பட்ட 141 புத்தகங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் கழித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 144,430 எரிபொருள் செலவு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் அச் செலவுகள் செலுத்தப்பட வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(இ)	மீளாய்வாண்டில் ரூபா 259,000 க்கு போட்டோ பிரதி இயந்திரமானது கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை பற்றுச்சீட்டு 2024 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்தும், அத் தொகை நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் அச் செலவுகள் செலுத்தப்பட வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ஈ)	LDSP நிதித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு சேவைக் கட்டிட நிர்மாணத்திற்கான இறுதிக் கட்டணக் கொடுப்பனவு ரூபா 1,608,838 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் இது ஒரு பொறுப்பாகவே காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

(உ) மீளாய்வாண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதத்திற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டண வருமானம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	அறவீடுகளை விரைவாக பெற்றுக் கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 128 பிரிவு	சபையில் பயன்படுத்தப்படும் ஆதனங்களினை அடையாளம் கண்டு அவற்றின் உரிமையினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை	சட்ட விதிகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்			
(i) இலக்கம் 5(xii) விதி	காசு மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுவோர், வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர் மற்றும் களஞ்சிய பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான பிணைப்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை	நிதி, நிருவாக விதிகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) இலக்கம் 59 விதி	சபையின் வருமானப் பரிசோதகரால் ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் வியாபாரங்கள் பற்றிய நிரல்	பதில் தரப்படவில்லை	மேற்படி

	தயாரிக்கப்பட்டு ஒவ்வொராண்டு மார்ச் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(iii) இலக்கம் 81 விதி	ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை	மேற்படி

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,274,731 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,477,087ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	4,500,000	1,546,992	1,440,688	106,303	2,500,000	1,151,488	1,104,579	46,909
(ii)	வாடகை	4,850,000	3,592,034	3,031,511	560,513	5,950,000	6,181.187	5,542,903	666,783
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	1,195,000	1,116,705	1,100,025	16,680	1,195,000	692,090	675,410	16,680
(iv)	ஏனைய வருமானம்	3,820,000	2,197,998	2,197,998	-	11,910,000	11,550,940	11,550,940	-
	கூட்டுத் தொகை	14,365,000	8,453,729	7,770,222	683,496	21,555,000	19,575,705	18,873,832	730,372

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையினால் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை அறவிடவேண்டிய இறைச்சிக் கடை வாடகையாக ரூபா 560,513 நிதிக்கூற்றில் காட்டப்பட்டு வருவதுடன் அத் தொகையினை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்புச் செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தங்களால் குறிப்பிடப்பட்ட தொகையினை பதிவழிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	குப்பை சேகரிப்புக் கட்டணத்திற்காக ரூபா 7,500,000 மதிப்பிடப்பட்டு ரூபா 2,184,985 அறவிடப்பட்டிருந்தது. இவ் மதிப்பீடானது உண்மையாக அறவிட வேண்டிய குடியிருப்பாளர்களினதும், கடை உரிமையாளர்களினதும் பட்டியலினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	குறித்த ஆண்டிலிருந்து முறையான திண்மக்கழிவு பதிவேடு தயாரிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர் மற்றும் கடைகள், ஹோட்டல் போன்றவற்றில் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	முறையாக பதிவேடுகள் பேணப்பட்டு முறைப்படி அறவிடப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் 18 வியாபார நிலையங்களின் விளம்பர பதாதைகளுக்கு ரூபா 135,625 அறவிடப்பட்டிருந்தும், சபையின் வருமானத்தினை அதிகரிக்க மிகுதி வியாபார நிலையங்களில் காணப்படும் விளம்பரப் பதாதைகளுக்கு கட்டணத்தினை அறவிடுவதற்கு துணைவிதிகள் இயற்றப்பட்டு அல்லது முறையான அனுமதிகளை பெற்று அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் வியாபார நிலையங்களில் பொருத்தப்பட் டுள்ள விளம்பரப் பலகைகளின் அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	முறையான அனுமதி பெறப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	சபையினால் 2024 ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரையான 12 மாதங்களுக்குரிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் 2024 நவம்பர், திசெம்பர் மாதங்களுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் போன்றவை உரிய காலப்பகுதிகளில் கணிப்பீடு செய்யப்பட்டு கோரிப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இனிவரும் காலங்களில் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் தொடர்பான அறவீடுகளை விரைவாக பெற்றுக்கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் பிரகாரம், கோரிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் ஒரு டொன் உக்கக்கூடிய கழிவிற்கு ரூபா 200 மற்றும் உக்காத கழிவிற்கு ரூபா 300 செலுத்தவேண்டியுள்ளதால் சபை பொதுமக்களிடமிருந்து நாளாந்தம் தரம்பிரித்து பெற்றுக்கொள்ளும் திண்மக்கழிவுகளை சேதனப்பசளை உற்பத்திற்காக பயன்படுத்தியிருந்தால் கொட்டப்படும் கழிவுகளுக்கான தொகையை சேமித்திருக்க முடியும். இத்தகைய செயற்பாட்டினை சபை நிறைவேற்ற தவறியமையினால் மீளாய்வாண்டில் கட்டணமாக ரூபா 418,826 மற்றும் உழவு இயந்திர எரிபொருள் போன்றன மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தன.	தற்போது எமது சபையினால் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கழிவுகளை தரம் பிரித்து பெற்றுக் கொள்ளவதற்கான செயற்பாடுகள் முழுமையா மேற்கொள்ளப்படுகின்றது.	தரம்பிரித்து கழிவுகளை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அந்தக்கழிவுகளை உர உற்பத்திக்கு பயன்படுத்த முயற்சிகனை மேற்கொள்ள வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
ஓய்வூதிய திணைக்களத்திற்கு சபையினால் 2024 ஆம் ஆண்டு யூலை வரை ரூபா 492,634 செலுத்தப்பட வேண்டும் என கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தும் அவை தொடர்பான எவ்வித தகவல்களும் சபையில் காணப்பட்டிருக்கவில்லை. இருந்தும், அவற்றின் உண்மைத் தன்மையினை பரிசீலனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஓய்வுதிய திணைக்களத் திற்கு சரியான தொகை தொடர்பான விபரங்களைக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.	செலுத்த வேண்டிய தொகை ஓய்வூதிய திணைக்களத்திடம் தெளிவுபடுத்தப்பட்டு பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
கடந்த ஆண்டில் எண்ணெய் இயந்திர உபகரணங்கள் ரூபா 3,297,000 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், அப் பொருட்களை கணக்காய்வுத் திகதி வரை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இயந்திர உபகரணங்களை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினூடாக பெண்கள் அமைப்பு ஒன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அவை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது.	குறித்த இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் காணி, கட்டிடங்கள் மற்றும் 30 வாகனங்களின் கிரயங்கள் மற்றும் அதன் மீள்மதிப்பீட்டு	எதிர்காலத்தில் காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பீடு	பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு

	பெறுமதிகள் போன்றவை கணிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	செய்யப்பட்டு இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பழுதடைந்த வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்தல் தொடர்பான தகவல்கள் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அவை தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**சிபார்சு**
சபையினால் மீளாய்வாண்டு காலப்பகுதியில் இலத்திரனியல் நூலகம் (E-Library) மற்றும் அலுவலக பயன்பாட்டிற்காக கணினி, பிறின்டர் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பன ரூபா 947,000 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறப்பட்ட கணினிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் உரிய முறைப்படி எதிர்பார்த்த தரமான பொருட்கள் பெறப்பட்டுள்ளதா என்பதை அது தொடர்பான நிபுனத்துவ அறிவு கொண்ட தரப்பினர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பொருட்கள் பெற்றுக்கொண்ட பின்னரும் குழுவின் அறிக்கை பெறப்பட்ட பின்னரே கொடுப்பனவு செய்யப்படும்.	நிபுனத்துவ அறிவு கொண்ட தரப்பினர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**சிபார்சு**
சபையினால் LDSP நிதித் திட்டத்தின் கீழ் ரூபா 8,181,057 மதிப்பிடப்பட்டு ரூபா 9,523,092 க்கு முடிவுறுத்தப்பட்ட அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட புனர்நிர்மாணம் ரூபா 962,257 தொகை பெறுமதியான வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடந்த வருடத்தில் LDSP நிதித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களைப் பொருத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டம் முலப்பொருட்கள் இன்மையினால் இயங்காமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டிருந்தது.	அலுவலக வளாகத்தில் உள்ள கட்டடம் புனர்நிர்மானம் செய்யப்படும் போது G4 ற்கான தேவை காணப்பட்டதால் அவ்வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது இச் செயற்றிட்டமானது மக்கள் முற்போக்கு அபிவிருத்தி சங்க இளைஞர் அமைப்புடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அதற்கான ஒத்திகை பார்க்கப்பட்டு வேலை தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையினால் 04 ஊழியர்களிடமிருந்து நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 65,069 இடர்கடன் நிலுவையினை அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இவ் உத்தியோகத்தர்களுக்கான பணிக்கொடை கிடைக்கும் பட்சத்தில் கடன் தொகை அறவீடு செய்யப்பட்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.8 வாகனங்களின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 07 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களின் உரிமையினை சபையின் பெயரிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் பழுதடைந்து காணப்பட்டிருந்தும் அவற்றினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபைக்கு சொந்தமான வாகனங்களில் திருத்தக் கூடியவற்றை திருத்துவதற்கும் மிகுதியை ஏலவிற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
சபையின் 2022 ஜனவரி 11 ஆந் திகதி இடம்பெற்ற 46 வது சபை கூட்டத்தின் 46/05 ஆம் இலக்க தீர்மானத்தில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 30 ஆம் பிரிவு மற்றும் நி.பி. 133(1) பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்கான பரிந்துரைகள் தயாரித்து உள்ளக கணக்காய்வின் வினைத்திறனை அதிகரிக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற் காக மூன்று சிரேஷ்ட உத்தியோகத்தர் கள் நியமிக்கப்பட்டு நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்துவதற்கு மற்றும் தங்களுடன் இணைந்து ஆலோசனைக ளைப்பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	உள்ளகக் கணக்காய்வினை வினைத்திறனாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான நிதி ஏற்பாடுகளும் வரவுசெலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய தேவையான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
குறித்துரைக்கப்பட்ட மாகாண நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,253,940 செலவில் கண்ணகிபுரத்தில் சேதனப்பசளை தயாரிக்கும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு சேதனப்பசளை உற்பத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,210,000 க்கு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருந்தும், கணக்காய்வுத் திகதி வரை எவ்வித பாவனையும் இன்றி காணப்படுவதுடன், அவ்நிலையத்தினை செயற்படுத்துவதற்கு 07 வருடங்களிற்கு மேலாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி பயனற்றதாக காணப்படுகின்றது.	இந்த வருடம் கண்ணகிபுர மக்களுடன் இறுதிகட்ட விழிப்புணர்வு கூட்டத்தினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. அதன் பின்னரும் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பினை தெரிவிக்கும் போது தேசனப்பசனை தயாரிக்கும் இயந்தரத்தினை சபையின் அனுமதியுடன் பொருத்தமான பிரதேச/ நகர/ மாநகர சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்டும்.	ஒரு திட்டத்தினை செயற்படுத்த முன் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.